03.06.2025 அ.வ.எண். 135/2023 PW-1

| | |
|---|---|
| பெயர் | ரங்கநாதன் |
| த.பெ. | காளிச்சாமி |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 1-3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தந்தை பெயர் மாறியுள்ளதால் அதற்காக தாக்கல் செய்துள்ளேன். என் ஆதார் அட்டையில் என் தந்தை பெயர் காளியப்பன் என்றுள்ளது. எங்கள் தந்தையின் ரேசன் அட்டையில் காளியண்ணன் என்று இருந்தது. அதில் எதிலும் நான் பெயர் மாற்றம் செய்யவில்லை. என் பள்ளி சான்றிதழில் என் தந்தை பெயர் காளிச்சாமி என்றுள்ளது. என் தந்தை EB ல் பணிபுரிந்து வந்தார். அதில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டார். என் தந்தை பணிபுரிந்த EB துறையில் என் தந்தை பெயர் காளியண்ணன் என்றுள்ளது. என் தந்தையின் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழில் காளியப்பன் என்றுள்ளது. நான் தான் என் தந்தைக்கு ஒரே வாரிசா என்றால் இல்லை, எனக்கு அக்கா மற்றும் அண்ணா ஆகியோர் உள்ளார்கள். என் அப்பாவின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று ஆகியவற்றை யார் மனு தாக்கல் செய்து பெற்றார்கள் என்றால் என் அண்ணன் தான் வாங்கினார். என் தந்தை பெயர் காளிச்சாமி (எ) காளியண்ணன் (எ) காளியப்பன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் அப்பாவின் அசல் ஆவணங்களில் உள்ளது போல் என் ஆவணங்களில் என் தந்தை பெயர் மாற்றம் செய்ய முயற்சித்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் தந்தை பெயர் காளிச்சாமி (எ) காளியண்ணன் (எ) காளியப்பன் என்று காட்டுவதற்கு போதுமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

Sd/-V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.